**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை – 2014**

---

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை அதிகாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்

சபையானது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் குறிப்பிட்ட ஆண்டினது மூலதன நிதியேற்பாட்டினது மொத்தப் பயன்பாட்டையும் திரண்ட நிதியத்திற்கு மாற்றஞ் செய்த போதும், 03 ஆம் இலக்க இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அக்கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கையிருப்புப் பரீசீலனை அறிக்கையின் பிரகாரம், விற்பனைக் கூடத்தின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி ரூபா 2,542,351 ஆகும். இக் கையிருப்பு நிதிக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஆ) நன்கொடைகளைப் பதிவு செய்வதற்கும் அவற்றைக் கணக்கிலிடுவதற்குமென கொள்கையொன்றை இனங்கண்டுகொண்டிராமையால் 2014 ஆம் ஆண்டில் நானாவித செயற்திட்டங்கள், நிறுவனங்கள், தனியார் துறை என்பவற்றின் மூலம் சபைக்குக் கிடைக்கப் பெற்ற 13,623 வெளியீடுகளைப் பெறுமதியிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணப்படும் இடர்க் கடன் மீதி ரூபா 13,156,972 ஆகும். இடர்க் கடன் பதிவேட்டின் பிரகாரம் இம் மீதி ரூபா 13,188,849 ஆகியமையால் ரூபா 31,877 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் நூலக உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களது மீதி ரூபா 25,999,058 ஆகும். இதில் இனங்காணப்படாத சொத்தாகிய ரூபா 1,306,631 உள்ளடங்கியிருந்தது.

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் பொருட்டு நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 139,844 பெறுமதியுடைய முற்பண மீதியை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 1990, 1991 ஆம் ஆண்டுகளது கணக்காய்வுக் கட்டண நிலுவையும் 2010 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்தையும் உள்ளடக்கிய ரூபா 701,110 கூட்டுத் தொகை தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(இ) ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய 3 முதல் 10 ஆண்டுகள் பழமை வாய்ந்த நிறுத்தி வைத்த தொகையாகிய ரூபா 89,150 உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்குக் கணக்காய்வுத் தினமான 2018 சனவரி 09 வரை அனுப்பி வைக்கப்படாதிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை | தேசிய நூலகப் புத்தகக் கையிருப்பு சம்பந்தமாக 1976 முதல் 2014 வரையான 36 ஆண்டுகளின்போது கையிருப்பு பரீசீலிக்கப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இப் பெறுமதி ரூபா 35,618,611 ஆகும். |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ/ஏ/ஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், கணனிகளது துணைப்பாகங்கள், மென் அணி என்பன தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் நிதிப் பெறுபேறானது ரூபா 1,383,674 பற்றாக்குறை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டினது பற்றாக்குறை ரூபா 13,747,104 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் பற்றாக்குறை ரூபா 12,363,430 குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது மொத்தச் செலவினம் ரூபா 12,578,470 அதிகரித்தபோதும், அரச மானியம் ரூபா 23,235,000 அதிகரித்தமையே மேற்படி பற்றாக்குறை குறைவடைய மூல காரணமாக அமைந்தது எனலாம்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில் தொடர் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எனினும், ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றைக் கருத்திற் கொண்டதன் பின்னர் 2010 ஆம் ஆண்டில் ரூபா 3,484,240 ஆகவிருந்த பங்களிப்பு 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 10,459,097 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமானத்தை ஈட்டக்கூடிய விடயங்களில் ஈட்டக்கூடிய வருமானத்தை மதிப்பீடு செய்யாது போனமை, அநேக விடயங்களில் ஈட்டிய வருமானத்தை அறிக்கையிடாது போனமை ஆகியவற்றால் வருமானத்தை ஈட்டுவதிலான முன்னேற்றத்தை அளவிட முடியாது போனது. உதாரணமாக, 7 விடயங்களில் ஈட்டிய வருமானம் ரூபா 4,638,501 ஆகியபோதும், இவை தொடர்பான முற் கூட்டிய மதிப்பீடு இருக்கவில்லை.

(ஆ) நான்கு தொகுப்புடனும் முன்னுரையுடனும் கூடிய பன்சிய பனஸ் ஜாதக புத்தகத்தை மீண்டும் அச்சிடும் பணி கல்விப் பிரசாரத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அப்பணி நடைபெறவில்லை. அதன் காரணமாக, மீள அச்சிடும் வேலையைச் சபை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் 2015 ஆம் அண்டில் பெறப்பட்டு 5 புத்தகங்களின் முன்னுரை மற்றும் 2 தொகுதிகள் 2017 ஆம் ஆண்டில் நிறைவடைந்திருந்தன. III மற்றும் IV ஆகிய 2 தொகுதிகள் 2018 சனவரி 09 ஆந் திகதியான கணக்காய்வுத் தினம் வரை நிறைவடையாதிருந்தன.

(இ) 1850 ஆம் ஆண்டிற்கு முன்னரும் 1850 முதல் 2000 ஆம் ஆண்டு வரையும் பிரசுரிக்கப்பட்ட பழைய இலக்கிய நூல்களது பெயர்கள் அவற்றுடன் தொடர்புடையதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டவாறு சுருக்கமான சிங்கள நூல் பெயர்களைக் கொண்ட பதிவேடு ஒன்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருந்தபோதும், 2018 சனவரி 09 ஆந் திகதியாகிய கணக்காய்வுத் தினம் வரை தயாரிப்பு நடவடிக்கைகள் முடிவடையாதிருந்தன.

(ஈ) சாஸ்திரீய ரீதியான நூல்களை மீள அச்சிடும் நடவடிக்கையாக புத்சரன நூலை மீளாய்வு செய்யும் பணி 2009 ஏப்ரல் 23 ஆந் திகதியன்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்களக் கல்விப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வு நடவடிக்கைகள் முடிவடைய வேண்டிய நாள் சம்பந்தமாக

சேவையை வழங்கும் நிறுவனத்துடன் இணக்கம் காணப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு வேலைகள் முடிவடைந்து 2012 ஆகஸ்ட் 13 ஆந் திகதியன்று சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் எழுத்துக்களை வடிவமைக்கும் வேலைகள் நடைபெற்று அச்சிடுவதற்காக 2013 டிசெம்பர் 02 ஆந் திகதியன்று கல்விப் பிரசுரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களமானது எழுத்துக்களை வடிவமைக்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்து அதன் பின்னர் சபையால் அச்சுப் பிரதியின் நகல் பரீசீலிக்கப்பட்டதையடுத்து அச்சிடும் நிறுவனம் ஒன்றிடம் திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும் 2018 சனவரி 09 ஆந் திகதியாகிய கணக்காய்வுத் தினம் வரை நடவடிக்கைகள் நிறைவடையாதிருந்தன.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனையின் பின்னர் பணம் வழங்கப்படும் அடிப்படையில் எழுத்தாளர்களிடமிருந்து பெறப்பட்ட புத்தக விற்பனை சம்பந்தமாக பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர், பணிப்பாளர் - நூலக மேம்பாடு நியமப்படுத்தல் மற்றும் சபையின் தலைவரால் அடிக்கடி விலை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், முகாமைத்துவச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர விலைக் கொள்கையொன்றைச் சபை அறிமுகஞ் செய்திருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் சபை அச்சிட்ட ரூபா 413,897 பெறுமதியான 3,813 சபைப் பிரசுரக் கையிருப்பு மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 7,255 கூறுகளைக் கொண்ட கையிருப்பு என்பன 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் களஞ்சியத்திலும் புத்தகத் தகவல் கட்டுப்பாட்டுப் பிரிவிலும் எஞ்சியிருந்தன.

(இ) 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கையிருப்புக் கணிப்பின்போது பாடப்புத்தகங்களது சேவைப் பிரிவில் 7,917 புத்தகங்கள் குறைவடைந்திருந்தமை கணிப்புச் சபையால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக நிறுவனம் மேற்கொண்ட பரீசீலனைகளின் மூலம் 2,908 புத்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதும், மேலும் குறைவாக இருந்த 5,009 புத்தகங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நன்கொடை நிறுவனங்களால் வழங்கப்படும் பல்வேறு புத்தகங்களையும் தனி நபர்களால் சபைக்கு நன்கொடையாக வழங்கப்படும் புத்தகங்களையும் பொறுப்பேற்பதற்குச் சபையில் பிரிதான செயற்திட்டம் ஒன்று இருக்காததுடன், இப் பிரசுரங்களை முறைப்படி ஆவணங்களில் பதிவு செய்வதற்கும் அவற்றைப் பாதுகாப்பது தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.3 குறைவான நிதியப் பயன்பாடு

--------------------------------------------------

பொருட் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் குறித்த காலத்தினுள் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமையால் அதற்கென வழங்கப்படும் மூலதன நிதியேற்பாடு முற்றாகப் பயன்படுத்தப்படாது 2014 சனவரி 01 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாதிருந்த மீதி ரூபா 8,715,000 ஆகும். இது 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,972,000 ஆக அதிகரித்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கையுடன் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் 2 ஆண்டுகள், 6 மாதங்கள் தாமதமாகி 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 சனவரி 28 ஆந் திகதியன்று முகாமைத்துவச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான சபையினது செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ள அறிவுறுத்தலுக்கமைவான விடயங்களை உள்ளடக்கியவாறு நாளது வரையாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக, செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய நிறுவனத்தினது ஒழுங்கமைப்பு வியூகம், ஒட்டு மொத்த வருமானமும் செலவினமும் உள்ளடங்கிய வரவு, செலவுத் திட்டம் மற்றும் பொருட் கொள்வனவு தொடர்பான பொருட் கொள்வனவுத் திட்டம் என்பன உள்ளடக்கப்படாதிருந்தன.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 அந் திகதிய டீஊம்ஏ/2009(1) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கை மற்றும் 1998 பெப்ரவரி 13 ஆந் திகதிய 98/1 அம் இலக்க முகாமைத்துவத் திணைக்களத்தினது கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் ஆண்டின்போது நிறைவேற்றப்படும் வேலைகள் தொடர்பான அறிக்கைகள் நிதி, திட்டமிடல் அமைச்சிற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதிகளுடன் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.4 வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் செலவினம் என்பவற்றிக்கிடையே 25 முதல் 100 சதவீதமான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியதால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்பு | |
|---|---|---|---|
| (அ) | சொத்து முகாமைத்துவம் | (i) | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்படாமை |
| | | (ii) | புத்தக நன்கொடை ஆவணப்படுத்தப்படாமை |
| (ஆ) | கணக்கீடு | (i) | பேரேட்டுக் கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படாமை மற்றும் களஞ்சியக் கையிருப்புக் கட்டுப்பாட்டுப் பேரேடு பேணப்படாமை. |
| | | (ii) | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளுக்கான பதிவேடு பேணப்படாமை. |
| (இ) | பொருட் கொள்வனவு | (i) | திட்டப் பிரகாரம் பொருட் கொள்வனவு நடைபெறாமை |
| | | (ii) | ஒப்பந்தப் பதிவேடு நாளது வரையாக்கிப் பேணப்படாமை |
| (ஈ) | முற்பணக் கட்டுப்பாடு | (i) | முற்பணப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படாமை |
| | | (ii) | முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கான உறுதிச் சான்றைச் சான்றுபடுத்திப் பதிவேட்டில் பதிவு செய்வதில் தாமதம். |